# இந்திய அரசியலமைப்பு

**இந்திய அரசியலமைப்பின் வரலாறு**
**மாநிலங்கள் மறுசீரமைப்பு**
**இந்திய அரசியலமைப்பின் சிறப்பு அம்சங்கள்**
**முகப்புரை** (PREAMBLE)
**ஒன்றியமும் அதன் ஆட்சி எல்லையும்**
**குடியுரிமை**
**அஸ்ஸாம் தேசிய குடிமக்கள் பதிவேடு** (NRC Assam)
**அடிப்படை உரிமைகள்** (Fundamental Rights)
**அரசின் வழிகாட்டு நெறிமுறைக் கோட்பாடுகள்**
**அடிப்படைக் கடமைகள் (ஷரத்து** 51A) (Fundamental Duties)
**அரசியலமைப்பின் அடிப்படை வடிவம்** (Basic structure)
**மத்திய அரசு**
**மாநில அரசாங்கம்**
**யூனியன் பிரதேசங்கள்**
**தற்காலிக, இடைநிலை மற்றும் சிறப்பு ஏற்பாடுகள்**
**நிதி ஆயோக்**
**ஆட்சி மொழி** (Official Language)
**அரசியலமைப்பில் திருத்தம்**
**அரசியலமைப்பின் படியான / அரசியலமைப்பு சாரா நிறுவனங்கள்**
**இந்தியத் தேர்தல் ஆணையம்**
**மாநிலத் தேர்தல் ஆணையம்**
**தேர்தல் சீர்திருத்தங்கள்**
**தேசிய மனித உரிமை ஆணையம்**
**தகவல் அறியும் உரிமைச் சட்டம்** (RTI)
**மத்தியக் கண்காணிப்பு ஆணையம்**
**லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா**
**இதர நிர்வாக அமைப்புகள்**
**கூட்டுறவுச் சங்கங்கள்**
**பட்டியல் மற்றும் பழங்குடியினர் பகுதிகள் நிர்வாகம்**
**மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம்**
**மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம்**
**தீர்ப்பாயங்கள்**
**நிர்வாக சீர்திருத்தங்கள்**
**சுதந்திர இந்தியாவின் முக்கியக் கமிட்டிகளும் கமிஷன்களும்**
**தமிழ்நாடு மாநிலம் உருவான வரலாறு**
**இந்தியாவின் சில முக்கிய அரசியலமைப்புத் திருத்தச்சட்டங்கள்**
**பாராளுமன்ற கலைச்சொற்கள்**

**குடிமையியல்** : பன்முகத் தன்மை - சமத்துவம் - தேசிய சின்னங்கள் - சமயச் சார்பின்மை - அரசாங்க அமைப்புகள் மற்றும் மக்களாட்சி - அரசாங்கங்களின் வகைகள் - தேர்தல், அரசியல் கட்சிகள் மற்றும் அழுத்தக் குழுக்கள் - நீதித்துறை - உள்ளாட்சி அமைப்புகள் - மனித உரிமைகளும் ஐக்கிய நாடுகள் சபையும் - சந்தை மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு - பெண்கள் மேம்பாடு - ஊடகமும் ஜனநாயகமும் - இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை - இந்தியாவின் சர்வதேச உறவுகள் - சாலை பாதுகாப்பு
**இந்திய அரசியலமைப்பின் ஷரத்துகள் - ஒரு பார்வை**
**சமீபத்திய அரசியலமைப்பு மாற்றங்கள்**
**கூடுதல் தகவல்கள்**

**அரசியல் அறிவியல்** : அறிமுகம் - அரசு - அரசியல் அறிவியலின் அடிப்படைக் கருத்தாக்கங்கள் - மக்களாட்சி.



www.surabooks.com

enquiry@surabooks.com Ph: 9840455556 / 044 4862 2200

## இந்திய அரசியல் சாசனம்

அரசியல் சாசனம் என்பது ஒரு நாட்டின் அடிப்படைச்சட்டமும், தலையாய சட்டமும் (Basic as well as Supreme Law of the land) ஆகும். பல அடிப்படைக் கோட்பாடுகளின்படி அமைந்துள்ள இதன் மூலம் ஒரு நாட்டின் பல்வேறு அங்கங்கள் செயல்படவேண்டிய விதமும் அவை வழிநடத்தப்படவேண்டிய முறைகளும் வரையறுக்கப்படுகின்றன.

இந்திய அரசியலமைப்பானது, ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இயற்றப்பட்ட பல்வேறு சட்டங்கள் மற்றும் பல்வேறு நாடுகளின் அரசியலமைப்பு சாசனங்கள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்ட அம்சங்களை உள்ளடக்கியுள்ளது.

## இந்திய அரசியலமைப்பின் வரலாறு

எம்.என். ராய் அவர்கள் இந்தியாவிற்கென ஒரு தனி அரசியலமைப்பு வேண்டும் என்ற கருத்தை முதன் முதலில் 1934–ஆம் ஆண்டில் முன்வைத்தார். இதனை சுயராஜ்ஜிய கட்சியும் ஆமோதித்தது. இதனைத் தொடர்ந்து 1935–ஆம் ஆண்டில் இந்தியாவிற்கென ஒரு தனி அரசியலமைப்பு எனும் கோரிக்கை இந்திய தேசிய காங்கிரஸாலும் முன் வைக்கப்பட்டது. இக்கோரிக்கை 1940–ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட '**ஆகஸ்ட் சலுகை**'யில் ஏற்கப்பட்டது. 1942–இல் அமைக்கப்பட்ட **கிரிப்ஸ் தூதுக்குழு** இந்திய அரசியலமைப்பு தொடர்பான பணிகளை இந்தியர்களிடமே விட்டுவிடலாம் எனப் பரிந்துரைத்தது. 1946–ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசின் அமைச்சரவை தூதுக்குழு திட்டப்படி இந்திய அரசியல் நிர்ணய சபை உருவாக்கப்பட்டது.

### வரைவுக்குழு (Drafting Committee)

இக்குழு, 1947 ஆகஸ்ட் 29 அன்று அமைக்கப்பட்டது.

தலைவர் : டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்

பிற உறுப்பினர்கள்:
- கோபாலசாமி ஐயங்கார்
- அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர்
- டாக்டர் கே.எம். முன்ஷி
- சையத் முகமது சாதுல்லா
- மாதவராவ் - (பி.எல். மிட்டர் என்பவருக்கு பதிலாக)
- T.T.கிருஷ்ணமாச்சாரி-(டி.பி.கெய்தானுக்கு பதிலாக)

- டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்கள் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் தந்தை என்றழைக்கப்படுகிறார். மேலும் அவர் 'தற்கால மனு' என்றும் அழைக்கப்படுகிறார்.
- வரைவுக்குழு, அரசியலமைப்பின் முதலாவது வரைவு அறிக்கையை, அரசியல் நிர்ணயசபையின் தலைவரிடம் (இராஜேந்திர பிரசாத்) 1948 பிப்ரவரி 21 அன்று சமர்ப்பித்தது. இரண்டாவது அறிக்கை 1948 அக்டோபரில் சமர்பிக்கப்பட்டது.

இந்திய அரசியல் சாசனம் ஏற்றுக்கொள்ளப்பட்டபோது 22 பகுதிகளையும் 8 அட்டவணைகளையும் 395 ஷரத்துகளையும் கொண்டிருந்தது. தற்பொழுது 25 பகுதிகளையும், 12 அட்டவணைகளையும், 448 ஷரத்துகளையும் கொண்டுள்ளது.

இந்திய அரசியல் நிர்ணய சபையானது பகுதியளவு மறைமுகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களையும் பகுதியளவு நியமன உறுப்பினர்களையும் கொண்டிருந்தது. ஆங்கிலேயரின் நேரடி ஆட்சிப்பகுதியில் 10 லட்சம் மக்களுக்கு ஒரு பிரதிநிதி எனும் விகிதப் பிரதிநிதித்துவத்தின் அடிப்படையிலும் மன்னராட்சிப் பகுதிகளின் அளவிற்கேற்ப நியமன உறுப்பினர்கள் மூலமும் அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள் இடம் பெற்றிருந்தனர். அரசியல் சாசன நிர்ணய சபை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 389 ஆகும். இதில் 296 பேர் பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர். 93 இடங்கள் சுதேசி மாகாணங்களுக்கு ஒதுக்கப்பட்டன. ஆனால், சுதேசிமாகாணங்கள் உறுப்பினர்களை நியமிக்காமல் அரசியல் நிர்ணய சபையை புறக்கணித்தன. பிரிட்டிஷ் இந்தியாவிற்கு ஒதுக்கப்பட்ட 296 இடங்களில் 292 பேர் மாகாண சட்டசபைகளின் மூலமும் எஞ்சிய 4 நபர்கள் தலைமை ஆணையராலும் நியமிக்கப்பட்டனர். இந்த 4 உறுப்பினர்களும் தலைமை ஆளுநரின் நேரடி கட்டுப்பாட்டுப் பகுதிகளான கூர்க், டெல்லி, அஜ்மீர்–மேவார் மற்றும் பலுசிஸ்தான் உள்ளிட்ட பகுதிகளை பிரதிநிதித்துவப்படுத்தினர். 1946 நவம்பர் மாதத்தில் இந்திய அரசியல் நிர்ணய சபை முழுமை பெற்றது.

இச்சபையின் முதல் கூட்டம் 1946 டிசம்பர் 9 அன்று நடைபெற்றது. இதில் 211 உறுப்பினர்கள் மட்டுமே கலந்து கொண்டனர். முஸ்லீம்லீக் இக்கூட்டத்தினை முழுமையாக புறக்கணித்தது. இக்கூட்டத்தின் தற்காலிகத் தலைவராக வி.சச்சிதானந்த சின்ஹா பணியாற்றினார். 1946 டிசம்பர் 11 அன்று இராஜேந்திர பிரசாத் இந்திய அரசியல் நிர்ணய சபையின் நிரந்தரத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

எச்.சி. முகர்ஜி மற்றும் வி.டி. கிருஷ்ணமாச்சாரி அதன் துணைத் தலைவர்களாகவும் சர் பி.என். ராவ் ஆலோசகராகவும் நியமிக்கப்பட்டனர். 1946 டிசம்பர் 13 அன்று ஜவஹர்லால் நேரு அவர்களால் அரசியலமைப்பு சாசனத்தின் குறிக்கோள் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதுவே பின்னாளில் முகப்புரைக்கு (Preamble) அடிப்படையாக அமைந்தது.

மொத்தம் 389 உறுப்பினர்களைக் கொண்டிருந்த அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள் எண்ணிக்கை இந்திய – பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு 299 ஆக குறைக்கப்பட்டது. அரசியல் நிர்ணய சபையானது 22 குழுக்களாகப் பிரிக்கப்பட்டது. அதில் 1947 ஆகஸ்ட் 29 அன்று அமைக்கப்பட்ட அரசியலமைப்பு சாசன வரைவுக்குழு மிக முக்கியமானதாகத் திகழ்ந்தது.

### அரசியல் நிர்ணய சபையில் உறுப்பினர்களாக இடம் பெற்ற பெண்மணிகள்

| பெண்களின் பெயர்கள் | குறிப்புகள் |
|---|---|
| தாஷாயணி வேலாயுதன் | புலையர் எனும் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் (கொச்சியைச் சேர்ந்தவர்) |
| ஹன்ஸா மேத்தா | ஐ.நா.வின் மனித உரிமைகள் தீர்மானத்துக்கான வரைவுக் குழுவில் உறுப்பினராக இருந்தார். (குஜராத்தை சேர்ந்தவர்) |
| துர்காபாய் தேஷ்முக் | ஒத்துழையாமை இயக்கத்திலும், உப்பு சத்தியாகிரகத்திலும் கலந்துகொண்டார். இவர் ஆந்திர மகிளா சபாவை தோற்றுவித்தவர். |
| பேகம் ஐசாஸ் ரசூல் | முஸ்லிம் லீக் கட்சியில் இணைந்து அரசியலில் ஈடுபட்டார். |
| அம்மு சுவாமிநாதன் | இந்திய பெண்களுக்கு சம உரிமை வழங்கும் அரசியலமைப்பு சாசனத்தை உருவாக்க வலியுறுத்தினார். |
| விஜயலட்சுமி பண்டிட் | ஜவஹர்லால் நேருவின் தங்கை ஆவார். ஐ.நா பொது சபையின் தலைவராக தேர்வு செய்யப்பட்ட ஆசியாவைச் சேர்ந்த முதல் நபர். |
| சுசேதா கிருபளானி | வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் பங்கு பெற்றார். அரசியல் சாசன கூட்டத்தில் வந்தே மாதரம் பாடலைப் பாடி துவக்கி வைத்து, தேசிய கீதம் பாடி நிறைவு செய்தார். |
| சரோஜினி நாயுடு | தேசிய காங்கிரஸின் முதல் இந்தியப் பெண் தலைவர். |
| லீலா ராய் | அனைத்து வங்காள பெண்கள் வாக்குரிமை கமிட்டியின் துணை செயலாளராக இருந்தார். |
| பூர்ணிமா பானர்ஜி | உப்பு சத்தியாகிரகம் மற்றும் வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றார். |



enquiry@surabooks.com Ph: 9840455556 / 044 4862 2200

| பெண்களின் பெயர்கள் | குறிப்புகள் |
|---|---|
| ஆன் மாஸ்கரீன் | மாகாண தேர்தலுக்காகவும், திருவதாங்கூர் மாநிலத்தை இந்தியாவோடு இணைப்பதற்கு கடுமையாக போராடியவர். |
| ரேணுகா ராய் | பெண்களுக்கு எதிரான முரண்பாடுகளையும், பாகுபாடுகளையும் கொடுமைகளையும் எதிர்த்துப் போராடினார். |
| கமலா சௌதரி | பெண்களின் மன உலகம் குறித்தும், நவீன நாடாக இந்தியா வளர்ந்து வருவது குறித்தும் பல சிறந்த கதைகளை எழுதியுள்ளார். |
| ராஜ்குமாரி அம்ருத் கௌர் | பெண் கல்விக்காக போராடிய அம்ருத், விளையாட்டு, மருத்துவம் போன்ற துறைகளில் பெண்கள் பங்கேற்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தினார். |
| மாலதி சௌதரி | 1933–ஆம் ஆண்டு தனது கணவரோடு இணைந்து 'உத்கல் காங்கிரஸ் சமாஜவாதி கர்மி' சங்கத்தை தோற்றுவித்தார். |

பிரிவினைக்குப் பிறகு இந்திய அரசியல் நிர்ணய சபை, இந்திய நாடாளுமன்றமாகவும் செயல்படத் துவங்கியது. இது 1947 நவம்பர் 17 அன்று முதன்முறையாகக் கூடியது. இந்திய அரசியல் சாசன சபையின் தலைவராக இராஜேந்திர பிரசாத் தொடர்ந்து நீடித்தார். அதே நேரம் இந்தியாவின் முதல் நாடாளுமன்றமாகவும் திகழ்ந்த இச்சபை, நாடாளுமன்றமாகச் செயல்படும் பொழுதெல்லாம் அதன் தலைவராக (Speaker) ஜி.வி. மவ்லாங்கர் செயல்பட்டார்.

## குடியரசு தினவிழா

- இந்திய அரசியலமைப்புச் சட்டம் 1950 ஜனவரி 26 அன்று நடைமுறைக்கு வந்தது. இந்நாளை நினைவுகூரும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 26–ஆம் நாள், இந்தியக் குடியரசு தினமாகக் கொண்டாடப்படுகிறது. இந்நாளில் இந்தியக் குடியரசுத்தலைவர் புதுடெல்லி இராஜபாதையில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து பொது மக்களிடையே உரையாற்றுவார்.
- சுதந்திரப் போராட்டத்தின் துவக்க காலத்தில், பிரிட்டிஷ் இராஜ்ஜியத்திற்குட்பட்ட பகுதியளவு சுதந்திரம் (டொமினியன்) வேண்டும் என்பதே கோரிக்கையாக இருந்து வந்தது. ஆனால் 1929 டிசம்பர் 31 அன்று கூடிய ஜவஹர்லால் நேரு தலைமையிலான இந்திய தேசிய காங்கிரஸின் லாகூர் கூட்டத்தில்தான் முதன் முறையாக இந்தியாவிற்குப் பரிபூரண சுதந்திரம் (Poorna Swaraj) வேண்டும் என்ற கோரிக்கை எழுப்பப்பட்டது. அத்துடன் 1930–ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 26–ஆம் நாளை பூர்ண சுயராஜ்ஜிய நாளாக (சுதந்திர தினமாக) கொண்டாட வேண்டும் எனத் தீர்மானம் இயற்றப்பட்டது. இத்தீர்மானத்தை பின்பற்றி 1930 முதல் 1947 வரை ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 26–ஆம் நாள் பூர்ண சுயராஜ்ஜிய தினமாக கடைபிடிக்கப்பட்டது. சுதந்திரத்திற்குப் பிறகும் சிறப்புமிக்க இந்நாளை நினைவுகூரும் வகையிலேயே 1949 நவம்பர் 26 அன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட (Submitted and adopted) இந்திய அரசியலமைப்பு சாசனம், இரு மாதகாலம் தாமதிக்கப்பட்டு 1950 ஜனவரி 26 அன்று அமலுக்கு கொண்டு வந்து (Came into force), அந்நாளை குடியரசுத் தினமாக கொண்டாட வழிவகை செய்யப்பட்டது.

2 ஆண்டுகள் 11 மாதங்கள் மற்றும் 18 நாட்கள் தனது பணியைச் செய்த அரசியல் நிர்ணய சபை மொத்தம் 11 முறை கூடியது. 1949 நவம்பர் 26 அன்று அரசியலமைப்பு சாசனம் முழுமையாக வடிவமைக்கப்பட்டு நாடாளுமன்றத்தின் முன்பு சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது (adopted). குடியுரிமை, தேர்தல்கள் மற்றும் இடைக்கால நீதிமன்றம் உள்ளிட்ட சில அம்சங்கள் மட்டும் உடனடியாக நடைமுறைக்கு வந்தன. எஞ்சியவை 1950 ஜனவரி 26 முதல் நடைமுறைக்கு வந்தன.

1950 ஜனவரி 26 அன்று, இந்தியாவிற்காக இந்தியர்களால் தயாரிக்கப்பட்ட அரசியல் சாசனம் அமலுக்கு வந்தது (Our constitution was adopted on 26th November 1949, but came into force on 26th January 1950). இந்நாள் இந்தியக் குடியரசு நாளாக (Republic Day) கொண்டாடப்படுகிறது.

### அரசியல் சாசன சபையின் சில முக்கியக் குழுக்கள்

| குழு | தலைவர் |
|---|---|
| நடைமுறை விதிகள், தலைமைக்குழு, தேசியக் கொடிக்கான இடைக்கால குழு | வி. இராஜேந்திர பிரசாத் |
| வருவாய் மற்றும் ஊழியர்கள் | அனுக்ரஹ நாராயண் சின்ஹா |
| நற்சான்றுக் குழு (Credential) | அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் |
| அவைக்குழு | பட்டாபி சீத்தாராமையா |
| அலுவல் குழு | கே.எம். முன்ஷி |
| அரசியல் நிர்ணய சபையின் வேலைகளுக்கான குழு | ஜி.வி. மவ்லாங்கார் |
| மாநிலங்கள் குழு, மத்திய அதிகாரங்கள் குழு, மத்திய அரசியலமைப்புக் குழு | ஜவஹர்லால் நேரு |
| அடிப்படை உரிமைகள், சிறுபான்மையினர், மலைவாழ் மற்றும் ஒதுக்கப்பட்ட இடங்களுக்கான அறிவுரைக்குழு. | வல்லபாய் படேல் |
| **இதன் துணைக் குழுக்கள் :** | |
| i. அடிப்படை உரிமைகள் துணைக் குழு. | ஜெ.பி. கிருபளானி |
| ii. சிறுபான்மையினர் துணைக் குழு | H.C. முகர்ஜி |
| iii. ஒதுக்கப்பட்ட இடங்களுக்கான குழு (வடகிழக்கு மற்றும் அஸ்ஸாம்) | கோபிநாத் பர்தோலாய் |
| iv. பிற ஒதுக்கப்பட்ட இடங்களுக்கான குழு | ஏ.வி. தாக்கர் |
| v. வடமேற்கு பிராந்திய பழங்குடி பகுதிகளுக்கான துணைக் குழு | |
| வரைவுக்குழு | டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் |

### இந்திய அரசியல் சாசன விதிகளும், அவற்றின் பகுதிகள் மற்றும் பிரிவுகளும்

| பகுதி (Part) | சாசனவிதிகள் | பிரிவு (Article) |
|---|---|---|
| - | முகப்புரை | - |
| I | ஒன்றியமும் அதன் ஆட்சி எல்லையும் | 1 - 4 |
| II | குடியுரிமை | 5 - 11 |
| III | அடிப்படை உரிமைகள் | 12 - 35 |
| IV | அரசுக் கொள்கையினை நெறிப்படுத்தும் கோட்பாடுகள் | 36 - 51 |
| IV A | அடிப்படைக் கடமைகள் | 51A |
| V | ஒன்றிய அரசாங்கம் | 52 - 151 |
| VI | மாநில அரசாங்கங்கள் | 152 - 237 |



enquiry@surabooks.com Ph: 9840455556 / 044 4862 2200

| பகுதி (Part) | சாசனவிதிகள் | பிரிவு (Article) |
|---|---|---|
| VII | Part-B states (ஏழாவது அரசியல் சாசன திருத்தம் மூலம் நீக்கப்பட்டது) | 238 |
| VIII | யூனியன் பிரதேசங்கள் | 239 - 242 |
| IX | ஊராட்சிகள் | 243 - 243-O |
| IX A | நகராட்சிகள் | 243P - 243ZG |
| IX B | கூட்டுறவு சங்கங்கள் | 243ZH- 243ZT |
| X | தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் | 244 - 244 A |
| XI | மத்திய மாநில உறவுகள் | 245 - 263 |
| XII | நிதி, சொத்து, வழக்கு மற்றும் ஒப்பந்தங்கள் | 264 - 300 A |
| XIII | இந்திய எல்லைக்குள் வியாபாரம், வணிகம் மற்றும் வணிகப் போக்குவரத்து | 301 - 307 |
| XIV | மத்திய மற்றும் மாநில அரசுகளின் பணிகள் | 308 - 323 |
| XIV A | தீர்ப்பாயங்கள் | 323 A - 323 B |
| XV | தேர்தல்கள் | 324 - 329 A |
| XVI | சில வகுப்பினர் தொடர்பான சிறப்பு சட்ட வகைமுறைகள் | 330 - 342 |
| XVII | ஆட்சிமொழி | 343 - 351 |
| XVIII | நெருக்கடி நிலை சட்ட வகை முறைகள் | 352 - 360 |
| XIX | பலவகைப்பட்டவை | 361 - 367 |
| XX | அரசியலமைப்பில் திருத்தம் | 368 |
| XXI | தற்காலிக, இடைமாறு கால மற்றும் திரும்பப் பெறப்பட்ட விதிகள் | 369 - 392 |
| XXII | அரசியலமைப்பின் தொடக்கம், தலைப்பு மற்றும் திரும்பப் பெறப்பட்ட விதிகள் | 393 - 395 |

## இந்திய அரசியலமைப்பு சாசனத்தின் மூலாதாரங்களும் அவற்றிலிருந்து பெறப்பட்ட அம்சங்களும்

| மூலாதாரம் | பெறப்பட்ட அம்சங்கள் |
|---|---|
| இந்திய அரசுச் சட்டம், 1935 | கூட்டாட்சி முறை, ஆளுநர் அலுவல், நீதித்துறை, பொதுத் தேர்வு ஆணையங்கள், அவசரகாலத் திட்டங்கள் மற்றும் ஆட்சிமுறை சார்ந்த விவரங்கள் |
| பிரிட்டிஷ் அரசியலமைப்பு | நாடாளுமன்ற அரசு, சட்டத்தின்படியான ஆட்சி, சட்டமியற்றும் நடைமுறை, ஒற்றைக்குடியுரிமை, கேபினெட் முறை, தனியுரிமை நீதிப்பேராணை, நாடாளுமன்ற சலுகைகள் மற்றும் ஈரங்க சட்டசபை |
| அமெரிக்க அரசியலமைப்பு | உச்ச மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பது மற்றும் பதவி நீக்கும் முறை, துணை குடியரசுத்தலைவர் பதவி, குடியரசுத்தலைவர் மீதான அரசியல் குற்றச்சாட்டு, நீதிமுறை மேலாய்வு, நீதித்துறை சுதந்திரம் மற்றும் அடிப்படை உரிமைகள் |
| அயர்லாந்து அரசியலமைப்பு | ராஜ்யசபாவிற்கு உறுப்பினர்களை நியமனம் செய்தல் மற்றும் குடியரசுத்தலைவர் தேர்தல் முறை, அரசின் வழிகாட்டுக் கோட்பாடுகள் |
| கனடா அரசியலமைப்பு | உச்சநீதிமன்ற ஆலோசனை எல்லை, ஆளுநர்கள் மத்திய அரசால் நியமனம் செய்யப்படுவது, மீதமுள்ள அதிகாரங்கள் மத்திய அரசிடம் இருப்பது மற்றும் மத்திய அரசு ஆதிக்கம் கொண்ட உறுதியான கூட்டாட்சி. |
| ஆஸ்திரேலியா அரசியலமைப்பு | நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டமர்வு, கலப்பு பொருளாதாரம் கலப்பு மற்றும் பொதுப்பட்டியல் |
| ஜெர்மனி அரசியலமைப்பு | அவசர காலத்தில் அடிப்படை உரிமைகளை தற்காலிகமாக தடை செய்தல் |
| ரஷிய அரசியலமைப்பு | அடிப்படைக் கடமைகள் மற்றும் முகவுரையில் உள்ள நீதிக் குறிக்கோள் (சமூக, பொருளாதார மற்றும் அரசியல்) |
| பிரெஞ்சு அரசியலமைப்பு | முகவுரையில் உள்ள சமத்துவம் மற்றும் சகோதரத்துவம், குடியரசு, சுதந்திரக் குறிக்கோள் போன்ற வார்த்தைகள் |
| தென்னாப்பிரிக்க அரசியலமைப்பு | அரசியலமைப்பு சட்டதிருத்த செயல்முறை மற்றும் ராஜ்ய சபா உறுப்பினர்கள் தேர்தல் |
| ஜப்பான் அரசியலமைப்பு | சட்டத்தின்படியான நடைமுறை |

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உண்மைப் பிரதிகள் (இந்தி, ஆங்கிலம்) நாடாளுமன்ற நூலகத்தில் **ஹீலியம்** வாயு நிரப்பப்பட்ட பேழையில் வைத்து பாதுகாக்கப்பட்டு வருகிறது.

## அரசியலமைப்பின் அட்டவணைகள்

| அட்டவணை எண் | அம்சங்கள் | உள்ளடங்கிய ஷரத்துகள் |
|---|---|---|
| **முதல் அட்டவணை** | இந்திய ஒன்றியமும் அதன் எல்லைகளும், 28 மாநிலங்கள், 8 யூனியன் பிரதேசங்கள் அடங்கிய பட்டியல். | 1 முதல் 4 |
| **இரண்டாவது அட்டவணை** | குடியரசுத்தலைவர், உச்ச / உயர்நீதிமன்ற நீதிபதிகள் உள்ளிட்ட பலரின் ஊதியங்களைப் பற்றியது. | |
| பாகம் A | குடியரசுத் தலைவருக்கும், மாநில ஆளுநருக்குமான மாத ஊதியங்கள் அளிப்பது பற்றியது. | 59(3), 158(3) |
| பாகம் B | 1956–ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டப்படி நீக்கப்பட்டுள்ளது. | |
| பாகம் C | நாடாளுமன்ற, சட்டமன்ற சபாநாயகர்கள், துணைச் சபாநாயகர்கள், மாநிலங்களவை தலைவர், துணைத்தலைவர், மாநில சட்ட மேலவையின் அவைத் தலைவர், துணைத் தலைவர் ஆகியோரின் ஊதியங்கள், படிகள் அளிப்பது பற்றியது. | 65(3), 75(6), 97, 164(5), 186 |
| பாகம் D | உச்ச நீதிமன்றம், மற்றும் உயர் நீதிமன்றங்களின் நீதிபதிகளுக்குரிய ஊதியங்கள் பற்றியது. | 125, 221 |
| பாகம் E | தலைமைத் தணிக்கையாளர் ஊதியம் அளிப்பது பற்றியது. | 148(3) |

www.surabooks.com



| அட்டவணை எண் | அம்சங்கள் | உள்ளடங்கிய ஷரத்துகள் |
|---|---|---|
| **மூன்றாவது அட்டவணை** | மத்திய அமைச்சர்கள் பதவிப் பிரமாணம், இரகசியக் காப்புப் பிரமாணம், நாடாளுமன்ற உறுப்பினர்களின் உறுதிமொழி, உச்ச நீதிமன்ற நீதிபதிகள், தலைமைத் தணிக்கையாளர், மாநில அமைச்சர்கள், மாநில சட்டமன்ற உறுப்பினர்கள், உயர்நீதிமன்ற நீதிபதிகளின் உறுதிமொழிகள் இதில் அடங்கும். | 75, 84, 99, 124, 146, 173, 188 மற்றும் 219 |
| **நான்காவது அட்டவணை** | மாநிலங்களவை இட ஒதுக்கீடு – ஒவ்வொரு மாநிலத்திற்கும், யூனியன் பிரதேசங்களுக்கும் மாநிலங்களவையில் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய இடங்கள் பற்றிய பட்டியல். | 4 மற்றும் 80 |
| **ஐந்தாவது அட்டவணை** | தாழ்த்தப்பட்ட மக்கள் மற்றும் அஸ்ஸாம், மேகாலயா, திரிபுரா, மிசோரம் தவிர்த்து இதர மாநிலங்களில் வாழும் பழங்குடியின மக்களை நிர்வகிக்கும் விதிமுறைகளடங்கியது. | 244 |
| **ஆறாவது அட்டவணை** | அஸ்ஸாம், மேகாலயா, திரிபுரா மற்றும் மிசோரம் மாநிலங்களில் பழங்குடியினர் வாழும் பகுதிகளை நிர்வகிக்க உருவாக்கப்பட்டுள்ள விதிமுறைகள் பற்றியது. | 244 மற்றும் 275 |
| **ஏழாவது அட்டவணை** | மத்திய மாநில அதிகாரப் பகிர்வு, மத்திய பட்டியல் – 100 துறைகள் (முன்பு 97), மாநிலப்பட்டியல் – 61 துறைகள் (முன்பு 66), பொதுப் பட்டியல் – 52 துறைகள் (முன்பு 47) | 246 |
| **எட்டாவது அட்டவணை** | இந்திய நாட்டின் அரசியலமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 22 மொழிகளின் பட்டியல். | 344 மற்றும் 351 |
| **ஒன்பதாவது அட்டவணை** | நில உச்ச வரம்பு, நிலவரி, இரயில்வே துறை, தொழில் துறைகள் பற்றிய சட்டத் திருத்தங்கள் மற்றும் அவ்வப்போது மத்திய, மாநில அரசுகளால் இடப்படும் ஆணைகளும், உத்தரவுகளும் அடங்கியது. (1951–ஆம் ஆண்டு முதலாவது சட்டத்திருத்தம் மூலம் உருவாக்கப்பட்டது) | 31B |
| **பத்தாவது அட்டவணை** | மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் கட்சித் தாவலினால் பதவி இழக்கும் விதிமுறைகள் பற்றியது. (1985–ஆம் ஆண்டு 52–ஆவது சட்டத்திருத்தம் மூலம் உருவாக்கப்பட்டது) | 102 மற்றும் 191 |
| **பதினொன்றாவது அட்டவணை** | இந்தியாவிலுள்ள கிராமப் பஞ்சாயத்து ஆட்சிமுறைகள் (ஊராட்சி அமைப்புகள்) பற்றிய விளக்கங்கள் அடங்கியது. (1993–ஆம் ஆண்டு 73–ஆவது சட்டத்திருத்தம் மூலம் உருவாக்கப்பட்டது) | 243G |
| **பன்னிரண்டாவது அட்டவணை** | இது மாநகராட்சிகள், நகரப்பஞ்சாயத்துகள், சிறிய நகரங்களுக்கான நகராட்சி சபைகள் ஆகிய மூன்று வகையான நகராட்சி பற்றியது. பெரிய அளவிலான மாநகராட்சிகளின் செயல்பாடுகள், அதிகாரங்கள் ஆகிய விவரங்கள் அடங்கியுள்ளன. (1993–ஆம் ஆண்டு 74–ஆவது சட்டத்திருத்தம் மூலம் உருவாக்கப்பட்டது) | 243W |

பிரேம் பெஹாரி நரேன் ரைஜடா என்பவரால் இந்திய அரசியலமைப்புச் சட்டம் இத்தாலிய பாணியில், அவரது கைப்பட எழுதப்பட்டது .

## மாநிலங்கள் மறுசீரமைப்பு

ஆங்கிலேயர்கள் தங்களின் நிர்வாக வசதிக்கென இந்தியாவை மாகாணங்கள், மன்னராட்சிப் பகுதிகள், கவர்னரின் நேரடி நிர்வாகப் பகுதிகள் எனப் பல்வேறு நிர்வாகப் பகுதிகளாகப் பிரித்து ஆட்சி செய்தனர். சுதந்திரத்திற்குப் பின் இவை பெரிய அளவில் மாற்றங்கள் ஏதும் செய்யப்படாமலேயே நிர்வகிக்கப்பட்டு வந்தன. மொழியின் அடிப்படையில் மாகாணங்களை மறுவரையறை செய்ய வேண்டும் என்ற எண்ணம் பொதுமக்களிடையே ஏற்பட்டு, அவ்வெண்ணம் போராட்டங்களாக உருமாறத் தொடங்கியிருந்தது. இந்நிலையில் மொழிவாரி மாநிலங்கள் அமைப்பது குறித்த பரிந்துரைகளை அளிக்க 1948–ஆம் ஆண்டில் எஸ்.கே.தார் என்பவரின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. மொழிவாரி மாநிலங்கள் குறித்து தீவிரமாக ஆராய்ந்த இக்குழு, புதிதாக பிரிக்கப்படும் மாகாணங்கள் நிர்வாக வசதியை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டுமேயன்றி மொழியை அடிப்படையாகக் கொண்டிருக்கக் கூடாது எனப் பரிந்துரைத்தது. இக்குழுவின் பரிந்துரையில் திருப்தியடையாத இந்திய தேசிய காங்கிரஸ், 1948 டிசம்பரில் ஜவஹர்லால் நேரு–வல்லபாய் படேல்–பட்டாபி சீத்தாராமையா (J–V–P) ஆகிய மூவரைக் கொண்ட ஒரு குழுவினை அமைத்தது. 1949–இல் தனது அறிக்கையினை தாக்கல் செய்த இக்குழுவும் மொழிவாரியாக மாகாணங்களைப் பிரிக்காமல் நிர்வாக வசதியின் அடிப்படையிலேயே மாகாணங்களைப் பிரிக்க வேண்டும் என வலியுறுத்தியது. இந்நிலையில் மதராஸ் மாகாணத்திலிருந்த தெலுங்கு பேசும் மக்கள் தங்களுக்கெனத் தனி மாநிலம் வேண்டும் எனப் போராடத் துவங்கினர். 1952–ஆம் ஆண்டில் பொட்டி ஸ்ரீராமுலு என்பவர் தெலுங்கு பேசுவோருக்கெனத் தனி ஆந்திர மாநிலம் கேட்டு 56 நாட்கள் உண்ணாவிரதமிருந்து உயிர் துறந்தார். இதனையடுத்து மதராஸ் மாகாணத்தில் தெலுங்கு மொழி பேசுவோரின் போராட்டம் தீவிரமடைந்தது. வேறுவழியின்றி 1953–ஆம் ஆண்டில் மதராஸ் மாகாணத்திலிருந்து தெலுங்கு மொழி பேசுவோருக்கென ஆந்திரா எனும் தனி மாநிலம் உருவாக்கப்பட்டது.

இதனால் இந்தியாவின் இதர பகுதிகளிலும் மொழிவாரி மாகாண பிரிவினைக் கோரிக்கைகள் வலுத்தன. இப்பிரச்சனைக்கு தீர்வு எட்டும் விதத்தில் 1953 டிசம்பர் 22 அன்று ஃபசல்அலி தலைமையில் கே.எம். பணிக்கர் மற்றும் ஹெச்.என்.குன்ஸ்ரு அடங்கிய குழு ஒன்றினை பிரதமர் ஜவஹர்லால் நேரு அமைத்தார். பல்வேறு பிராந்திய மக்களைச் சந்தித்து அவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து கள நிலவரத்தினையும் உணர்ந்தறிந்த இக்குழு, இந்தியாவை 14 மாநிலங்களாகவும் சில



enquiry@surabooks.com Ph: 9840455556 / 044 4862 2200